# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2018.06.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மதுவரி (திருத்தம்)

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு*
*பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00***        **தபாற் செலவு : ரூபா *10.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறாக சட்டப்பயன் சாதனங்களை வைத்திருப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆட்களின் வகுதிகளை விசாலிப்பதற்குமாகும்.*

***வாசகம் 3:*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறாக சட்டப்பயன், மதுவரிக்குட்பட்ட பொருளொன்றின் மீதான தீர்வைகளிலிருந்தான எவையேனும் அரசிறை நட்டங்களை ஒழிக்கும் நோக்குடன் மதுவரிக்குட்பட்ட பொருள் ஒன்றின்மேல் ஒட்டப்படவேண்டிய பாதுகாப்பு சிறப்புக்கூறுகளை வழங்குவதற்கான விதிகளை ஆக்குவதற்கும் அத்தகைய பாதுகாப்பு சிறப்புக்கூறுகளை வழங்குவதற்காக விதிப்பனவுகளை அறவிடுவதற்கும் அமைச்சருக்கு தத்துவமளிப்பதற்குமாகும்.*

# மதுவரி (திருத்தம்)

ச.வ.–ஓ 21/2018

## (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஓராம் உட்பிரிவில், “உரிமமொன்றின்கீழ் மது வரிக்குட்பட்ட பொருளை உற்பத்திசெய்கின்ற அல்லது விற்பனை செய்கின்ற ஒவ்வோராளும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “உரிமமொன்றின், அனுமதிப்பத்திரமொன்றின் அல்லது அனுமதிச் சீட்டொன்றின்கீழ் ஏதேனும் மது வரிக்குட்பட்ட பொருளை இறக்குமதி செய்கின்ற, ஏற்றுமதி செய்கின்ற, இடம்பெயர்க்கின்ற, உற்பத்தி செய்கின்ற, விற்பனை செய்கின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற ஒவ்வோராளும்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், “குறித்தசில உரிமம் பெற்றவர்கள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “உரிமம், அனுமதிப்பத்திரம் அல்லது அனுமதிச்சீட்டு ஒன்றை வைத்திருப்பவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஒஅ) மதுவரிக்குட்பட்ட பொருளொன்று இறக்குமதி செய்யப்படும்போது, ஏற்றுமதி செய்யப்படும்போது, இடம்பெயர்க்கப்படும்போது, உற்பத்தி செய்யப்படும் போது, விற்பனை செய்யப்படும்போது, உடைமையில் வைத்திருக்கப்படும்போது அல்லது களஞ்சியப் படுத்தப்படும்போது அத்தகைய மதுவரிக்குட்பட்ட பொருளின்மேல் ஒட்டப்படவேண்டிய பாதுகாப்பு சிறப்புக்கூறுகளின் வகைகளை விதித்துரைத்தல்;

(ஒஆ) மதுவரிக்குட்பட்ட பொருளொன்று இறக்குமதி செய்யப்படும்போது, ஏற்றுமதி செய்யப்படும்போது, இடம்பெயர்க்கப்படும்போது, உற்பத்தி செய்யப்படும் போது, விற்பனை செய்யப்படும்போது, உடைமையில் வைத்திருக்கப்படும்போது அல்லது களஞ்சியப் படுத்தப்படும்போது அத்தகைய மதுவரிக்குட்பட்ட பொருளின்மேல் ஒட்டப்பட வேண்டுமென (ஒஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு சிறப்புக்கூறுகளை வழங்குவதற்கான விதிப்பனவு களை அறவிடுதல்;".

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.